நாள்.11.03.2026

**அசல் வழக்கு எண். 263/2022**
**பெயர். ராமசாமி**

**த.பெ. குழந்தைவேல்**

**வா.சா.1–1,5,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்குரையில் பாரா 3ல் " புல எண்.30/2 ல் 216குழியை தாவாகிராமத்தை சேர்ந்த ராமசாமி வேளாளர் மகன்கள் சின்னத்தம்பி வேளாளர்–1, வைத்தியலிங்கம் வேளாளர்–2 ஆகியோர்கள் முத்துகுட்டி வகையறாவிடமிருந்து 18.07.1911 ல் கிரையம் பெற்றுள்ளார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால்ஆமாம். 216 குழியை பொறுத்து அதன்பிறகு பல கிரையம் செய்யப்பட்டுள்ளது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். 26.09.1921 ல் சின்னதம்பி மற்றும் வைத்தியலிங்கம் சேர்ந்து முத்தையா மகன் மாணிக்க வேளாளருக்கு 216 குழியில் 54 குழி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதன்பிறகு 04.06.1965 ல் சி.ராமலிங்க வேளாளர் வை.காத்தலிங்கத்திடம் 216 குழியில் 33 குழி(11 செண்ட்) கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சொன்னார்கள் ஆனால் எனக்கு தெரியாது.

24.11.1975 ல் பெருமாள் வேளாளர் சுப்பிரமணிய வேளாளரிடம் 21 குழி கிரையம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. கேள்விபட்டுள்ளேன். நான் கிரயம் வாங்கிய விவரத்தை பிராதில் சொல்லிவிட்டு வேண்டுமென்றே கிரையம் கொடுத்ததை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. விற்ற கிரையங்களை சொன்னால் என் வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால்தான் சொல்லவில்லை என்றால் அது தவறு. வைரவசுந்தரம், முருகையன் சேர்ந்து 15.12.1988 ல் கு.ரா.வை.காத்தலிங்க வேளாளரிடம் அவர்களுக்கு பாகமாக கிடைத்த 14 1/2 செண்டை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் இது என் வழக்கிற்கு அப்பாற்பட்ட விசயம். ஆனால் கிரையம் கொடுத்துள்ளார்கள். பிரதிவாதி தரப்பில் அந்த ஆவணத்தின் நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது.

31.03.1989 ல் வைரவசுந்தரம், முருகையன் சேர்ந்து என்னிடம் புல எண்.30/2 ல் 2–2/3 செண்ட் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.3 என்றால் ஆமாம். எங்கள் குடும்பத்தில் செய்துகொண்ட பாக பத்திரத்தின்படி புல எண்.30/2 ல் 14 1/2 மற்றும் 2–2/3 செண்ட் மட்டும்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் மட்டும்தான் என்றால் சரியல்ல. விடுபட்ட சொத்துகளும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் பாக பத்திரத்தில் இல்லை என்றால் சரியல்ல. 14 1/2 மற்றும் 2–2/3 செண்ட் தவிர புல எண்.30/2 ல் உரிமை கொண்டாட வேறு சொத்து இல்லை என்றால் உரிமை கொண்டாட வேறு வாய்ப்பு உள்ளது. நான் 16 1/2 குழிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் ச.எண். என்ன என்றால்

30/2சி2. நான் 16 1/2 குழிக்கும் ச.எண்.30/2சி2க்கும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு போட்ட ச.எண் 30/2சி1 ல் 8 1/2 குழிக்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.3 ல் உள்ள சொத்திற்கு வடபுறம்தான் வழக்கு சொத்து உள்ளதா என்றால் அதை சுற்றியும் உள்ளது. நான் கிரையம் வாங்கியது 30/2சி2 என்றால் சரிதான். வா.சா.ஆ–3 ல் உள்ள நான்கெல்லை பஞ்சாயத்து ஒழுங்கைக்கு வடக்கு, மா.சுப்பிரமணிய வேளாளர் நிலத்திற்கு கிழக்கு, தெற்கு, தர்மலிங்கம் வேளாளர் நிலத்திற்கு மேற்கு என்றால் சரிதான். மா.சுப்பிரமணிய வேளாளர் யார் என்றால் 5ம் பிரதிவாதியின் தகப்பனார்.

வா.சா.ஆ.3 ல் உள்ள சொத்தின் வடபுறத்தில் 3 வீடுகள் சேர்ந்தார்போலும் 1 வீடு தனியாகவும் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு வடபுறம் உள்ள ச.எண்.30/2சி1 என்றால் ஞாபகமில்லை. வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனக்கு தெரியும் சொன்னால் பாதிப்பு வரும் என்பதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மொத்தம் 4 வீடுகள் உள்ளது அதை மறைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்திற்குவடபுறம் 1 அடி தூரத்திலேயே வீடுகள் உள்ளது என்றால் நடராஜன் வீடு மட்டும் உள்ளது. வழக்கு சொத்துவிவரத்திலுள்ள வீடுகள், மரம், செடி, கொடிகள் மற்றும் இதர விருட்சகங்களை மறைத்து காலி இடம் என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு புல எண்.30/2 ல் 14 1/2 மற்றும் 2–2/3 செண்ட் மட்டும்தான் என் குடும்பத்திற்கு அனுபவமும் பாத்தியமும் உண்டு என்றால் இல்லை. எங்கள் குடும்ப பூர்வீக சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்று கூறுவது தவறு. வழக்கு சொத்து எதிர்வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.